Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு *மணி 55 * ஓசை 107 உள்ளூர் - 17.04.2026 வெள்ளி விலை ரூ.4/- பக்கங்கள்-4 Website : http://maduraimaninews.com
Madurai Edition *Vol 55 * Issue 107 வெளியூர் - 18.04.2026 சனி Price Rs. 4/- Pages -4 Email: maduraimaninews@gmail.com

எல்லை பாதுகாப்பு படையில் காலியிடங்கள்!

நிம்மதியான தூக்கம் பெற பரிகாரங்கள்!

ராகுல் தமிழகம் வருகை!

அனல் பறக்கும் தேர்தல் செய்திகள்!



## ஹார்முஸ் ஜலசந்தி பாதுகாப்பு குறித்து பிரதமர் மோடியுடன் பிரான்ஸ் அதிபர் போனில் ஆலோசனை!

புதுடெல்லி, ஏப். 17–

பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான், பிரதமர் நரேந்திர மோடியுடன் போனில் பேசினார்.

ஈரான் போர் நிலவரம் கவலை அளிப்பதாக தெரிவித்த தலைவர்கள் ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் பாதுகாப்பான கப்பல் போக்குவரத்து நடைபெற வேண்டும் என வலியுறுத்தினர்.

## "ஈரானுடன் அமைதி ஒப்பந்தம் இறுதியானால் நான் பாகிஸ்தான் செல்வேன்" - ட்ரம்ப்!

வாஷிங்டன், ஏப். 17–

ஈரான் உடனான அமைதிப் பேச்சுவார்த்தை ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டால் நான் பாகிஸ்தான் செல்வேன் என அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களை சந்தித்த ட்ரம்ப் கூறியதாவது: ஈரான் உடனான அமைதிப் பேச்சுவார்த்தை சுமுகமாக உள்ளது. இதன் முன்னேற்றம் நேர்மறையாக அமைந்துள்ளது. கூடிய விரைவில் இரண்டு தரப்புக்கும் இடையிலும் ஒப்பந்தம் கையெழுத்தாகலாம். பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் அது நடந்தால் நான் செல்லக்கூடும். அங்கு நான் இருக்க வேண்டுமென அவர்கள் விரும்புகிறார்கள்.




இந்த பேச்சுவார்த்தையில் பாகிஸ்தானின் பணி சிறப்பானது. இந்த பேச்சுவார்த்தை இப்போது சரியான திசையில் உள்ளது. இந்த ஒப்பந்தம் மூலம் கச்சா எண்ணெய் விநியோகம் சீராகும், அதன் விலை குறையும், ஹார்முஸ் ஜலசந்தியில் கப்பல் போக்குவரத்து இயல்பு நிலைக்குத் திரும்பும். அமெரிக்காவின் நிபந்தனைகளுக்கு ஈரான் சம்மதம் தெரிவித்துள்ளது. இதில் அணு ஆயுதமும் உள்ளடங்கியுள்ளது என அவர் தெரிவித்தார்.

இதுவரை 5 அமெரிக்க அதிபர்கள் மட்டுமே தங்கள் பதவி காலத்தில் பாகிஸ்தான் சென்றுள்ளனர். கடைசியாக கடந்த 2006–ல் இஸ்லாமாபாத் நகருக்கு ஜார்ஜ் புஷ் சென்றிருந்தார். அதன் பிறகு பாகிஸ்தானுக்கு எந்தவொரு அமெரிக்க அதிபரும் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 6-ஆம் கட்ட தேர்தல் பிரசாரத்தை ஆண்டிபட்டியில் தொடங்குகிறார் முதல்வர் ஸ்டாலின்...!

சென்னை, ஏப் 17–

முதல்வர் ஸ்டாலின் தனது 6–ஆம் கட்ட தேர்தல் பிரசாரத்தை ஆண்டிபட்டியில் இன்று (17.04.2026)தொடங்குகிறார் . தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலையொட்டி, திமுக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் மேற்கொண்டு வரும் மு.க.ஸ்டாலின், இன்று தனது 6வது கட்டபிரசாரத்தை தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டியில் தொடங்குகிறார்.

இதுகுறித்து, திமுக வெளியிடப்பட்ட அறிக்கை:

திமுக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தமிழக முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் கடந்த மார்ச் 31 முதல் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். அவரது 6–ஆம் கட்ட பிரசாரம் ஆண்டிபட்டியில் வெள்ளிக்கிழமை (ஏப்.17) தொடங்கவுள்ளது.



ஆண்டிப்பட்டியில் மாலை 5 மணிக்கு நடைபெறும் பொதுக் கூட்டத்தில் ஆண்டிபட்டி, பெரியகுளம், போடி நாயக்கனூர் ஆகிய தொகுதிகளின் வேட்பாளர்களையும், இரவு 7 மணிக்கு திண்டுக்கல்லில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் திண்டுக்கல், பழனி, ஆத்தூர், நிலக்கோட்டை வேடசந்தூர் ஒட்டன்சத்திரம், நத்தம் ஆகிய தொகுதிகளின் வேட்பாளர்களையும் ஆதரித்து பிரசாரம் செய்கிறார்.

தொடர்ந்து, ஏப்.18– ஆம் தேதி,மாலை 5 மணிக்கு திருப்பூரில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில், திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, பல்லடம், அவிநாசி, தாராபுரம், காங்கயம்,. உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் ஆகிய தொகுதிகளின் வேட்பாளர்களையும்,

இரவு 7 மணிக்கு மேட்டுப்பாளையத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் மேட்டுப்பாளையம், உதகை, கூடலூர், குன்னூர், கவுண்டம்பாளையம், தொண்டாமுத்தூர் ஆகிய தொகுதிகளின் வேட்பாளர்களையும் ஆதரித்துப் பேசுகிறார். ஏப்.19 ஆம் தேதி, மாலை 4 மணிக்கு ஒசூரில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில், ஒசூர், கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, பர்கூர், வேப்பனஹள்ளி, தளி ஆகிய தொகுதிகளின் வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் மேற்கொள்கிறார்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொகுதி மறுவரையறை சட்ட திருத்தத்தை மொத்தமாக திரும்ப பெற வேண்டும்: மு.க.ஸ்டாலின்!

சென்னை, ஏப். 17–

தொகுதி மறுவரையறைச் சட்டத் திருத்தத்தை மத்திய பா.ஜ.க. அரசு மொத்தமாக திரும்பப் பெற வேண்டும் என தமிழ்நாடு முதல்–அமைச்சரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில் கூறியிருப்பதாவது:–

தமிழ்நாட்டின் அரசியலுக்கு மிக முக்கியமான நாள் இன்று. தொகுதி மறுவரையறைக்கு எதிரான நம் போராட்டங்களின் முடிவினை அறியப்போகும் நாள். நம்முடைய கடும் எதிர்ப்பினையும் போராட்டத்தினையும் தொடர்ந்து, தொகுதி மறுவரையறையால் தமிழ்நாட்டின் தொகுதி அளவு குறையாது என பிரதமர் அவர்களும் உள்துறை மந்திரி அவர்களும் நேற்று நாடாளுமன்றத்தில் வாய்மொழி உத்தரவாதம் அளித்துள்ளனர்.

ஆனால், சொல் ஒன்று – செயல் வேறு என்பதாக, இவர்கள் தாக்கல் செய்துள்ள சட்டமுன்வடிவு முழுக்க முழுக்க ஏமாற்றுத் திட்டமாக இருக்கிறது. இதை நம்பவும் முடியாது, ஏற்றுக்கொள்ளவும் முடியாது என திட்டவட்டமாக நிராகரிக்கிறோம். இந்த சட்டமுன்வடிவில் தொகுதி மறுசீரமைப்பு ஆணையத்துக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மூலம், இவர்கள் நினைத்தால் நினைத்த நேரத்தில், நினைத்த முறையில், எப்போது வேண்டுமானாலும் எதிர்காலத்தில், இவர்களுக்குச் சாதகமான வகையில், இந்திய மாநிலங்களின் தொகுதியளவை மாற்றியமைத்துக் கொள்வதற்கான வழிவகைகள் இந்த கருப்பு சட்டத்தில் இடம்பெற்றுள்ளன.



பெரும் சூழ்ச்சியை உள்ளடக்கியதாக இந்த சட்டமுன்வடிவு இருக்கிறது. அவசரகதியில் இதனை நிறைவேற்ற கூடாது. மத்திய அரசு இதனை முழுவதுமாக திரும்பப் பெற வேண்டும். எண்ணிக்கை பலம் இருக்கிறது என்ற திமிரில், எங்களின் எதிர்ப்பை மீறி இதனை நிறைவேற்றினால், அதற்கான விளைவுகளைத் தமிழ்நாட்டில் நீங்கள் சந்திக்க வேண்டியிருக்கும்.

நேரு அவர்கள் இந்தியை திணிக்க மாட்டோம் என்றார், இருந்தவரை அந்த உறுதிமொழியை காப்பாற்றினார். ஆனால், தற்போதைய மத்திய ஆட்சியாளர்களோ மாநில உரிமைகளைக் காப்பாற்றுவோம் என சொல்லிக்கொண்டே அதனை சில்லு சில்லாக நொறுக்கும் வேலையில் ஈடுபடுகின்றனர். நாம் கோருவது, முன்னாள் பிரதமர்கள் இந்திரா காந்தி அவர்களும், வாஜ்பாய் அவர்களும் அரசியலமைப்பு சட்டத்திலேயே திருத்தம் செய்து, 25 ஆண்டுகளுக்கு தொகுதி மறுசீரமைப்பை நிறுத்தி வைத்ததை போன்ற சட்டப் பாதுகாப்பு. #With–drawDelimitationBill

தமிழ்நாட்டின் குரலுக்கு மத்திய பா.ஜ.க. அரசு செவிசாய்த்தே ஆக வேண்டும்!


இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாட்டின் தலையெழுத்தையே மாற்றும்

# 3 மசோதாக்கள் மீது

## நாடாளுமன்றத்தில் மெகா வாக்கெடுப்பு!





புதுடெல்லி, ஏப். 17–

சட்டமன்றத் தேர்தலை கடந்து தமிழ்நாட்டில் இன்று முக்கியமாக விவாதிக்கப்படக்கூடிய விஷயமாக மாறி இருக்கிறது தொகுதி மறு வரையறை (delimitation) மற்றும் மகளிருக்கு இட ஒதுக்கீடு தரக்கூடிய மசோதாக்கள். நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரை தொடர்ந்து மூன்று நாட்கள் சிறப்பு அமர்வு கூட்டத்தை மத்திய அரசு இன்று தொடங்கியுள்ளது.

இந்த சிறப்பு அமர்வுக் கூட்டத்தில் நாட்டின் தலையெழுத்தையே மாற்றக்கூடிய மூன்று முக்கியமான மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஒன்று தொகுதி மறு வரையறை மசோதா , இரண்டாவது யூனியன் பிரதேச தொகுதிகள் மறு வரையறை திருத்த மசோதா மற்றும் மகளிர் இட ஒதுக்கீடு திருத்த மசோதா. மக்களவையில் மசோதாக்களை தாக்கல் செய்ய முதலில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அந்த வகையில் தாக்கல் செய்யலாம் என 251 உறுப்பினர்களும் அதற்கு எதிராக 175 உறுப்பினர்களும் வாக்களித்தனர். இதனை அடுத்து மூன்று மசோதாக்களும் அறிமுகம் செய்யப்பட்டு அதன் மீது விவாதம் நடத்தப்பட்டு வருகிறது. இந்த மசோதாக்கள் நிறைவேறுமா இல்லையா என்பது மாலை தெரிந்து விடும். ஏனெனில் இந்த மசோதாக்கள் மீதான வாக்கெடுப்பு மாலை 4 மணிக்கு நடைபெறும் என மக்களவைத் தலைவர் ஓம் பில்லா அறிவிப்பு வெளியிட்டு இருக்கிறார்.

இந்த மூன்று மசோதாக்களில் மிக முக்கியமானது தொகுதி மறு வரையறை மசோதா. இந்த மசோதாவுக்கு தென்னிந்திய மாநிலங்களிடமிருந்து குறிப்பாக தமிழ்நாட்டிலிருந்து கடும் எதிர்ப்பு கிளம்பி இருக்கிறது. இந்தியாவில் தொகுதி மறு வரையறை என்பது மக்கள் தொகை மாற்றங்களுக்கு ஏற்ப நாடாளுமன்ற மற்றும் சட்டசபை தொகுதிகளின் எல்லைகளை அல்லது எண்ணிக்கையை மாற்றியமைக்கும் ஒரு முக்கியமான ஜனநாயக செயல்முறை. ஒரு நாட்டின் அல்லது ஒரு மாநிலத்தின் மக்கள் தொகை காலப்போக்கில் மாறுபடுகிறது. எனவே ஒரு தொகுதியில் மக்கள் தொகை அதிகமாகவும் மற்றொரு இடத்தில் குறைவாகவும் இருந்தால் வாக்காளர்களின் பிரதிநிதித்துவம் சமமாக இருக்காது என்பதற்காக தொகுதி மறு வரையறை என்பது செய்யப்படுகிறது.

2011 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தற்போது தொகுதி மறு வரையறை செய்ய மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது. இவ்வாறு தொகுதி மறு வரையறை செய்யும்போது தற்போது உள்ள மக்களவை இடங்களின் மொத்த எண்ணிக்கை 543 லிருந்து 850 ஆக அதிகரிக்கப்படும். ஒவ்வொரு ஓட்டிற்கும் சமமான மதிப்பு என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தான் தொகுதி மறுவரையறை என்பது செய்யப்படுகிறது இதற்கு தான் தற்போது கடும் எதிர்ப்பு கிளம்பி இருக்கிறது.

இந்த மசோதா சட்டமானால் நாட்டில் ஒவ்வொரு மாநிலமும் கூடுதலான மக்கள் தொகை தொகுதிகளை பெறும். ஆனால் மொத்தமாக கணக்கிடும்போது தென் மாநிலங்களின் மொத்த மக்களவைத் தொகுதிகளின் பங்கீடு தற்போது இருக்கக்கூடிய 24.3%–ஐ விட குறையும் என சொல்லப்படுகிறது. எனவே மக்களவை மற்றும் மாநிலங்களவையில் பல்வேறு மசோதாக்களின் மீது முக்கிய முடிவுகள் எடுக்கக்கூடிய அதிகாரம் தென்னிந்திய மாநிலங்களின் வசம் இருந்து அதிக மெஜாரிட்டி கொண்ட வட மாநிலங்களின் வசம் சென்றுவிடும் என்கின்றன எதிர்க்கட்சிகள். பொருளாதார அடிப்படையில் இந்தியாவின் ஜிடிபி–க்கும் தொழில் உற்பத்தி மற்றும் வளர்ச்சிக்கும் அதிக பங்களிப்புதரக்கூடியவையாக தென்னிந்திய மாநிலங்கள் இருக்கும்போது நாடாளுமன்றத்தில் முக்கிய சட்டங்களை இயற்றக்கூடிய அதிகாரத்தில் வட இந்திய மாநிலங்களின் பிரதிநிதித்துவம் அதிகமாக இருப்பது சரியல்ல என கூறுகின்றன. திமுக தரப்பில் இன்று கருப்புக்கொடி போராட்டமும் நடத்தப்பட்டது. முதலமைச்சர் ஸ்டாலின் இந்த ஆவணங்களை எரித்து தன் எதிர்ப்பை பதிவு செய்தார்.

எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பு இருந்தாலும் இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்பதில் பிரதமர் மோடி தலைமையிலான பாஜக அரசு மிக தீவிரமாக இருக்கிறது. அந்த வகையில் மக்களவை மற்றும் மாநிலங்களவையில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கு பெரும்பான்மை இருந்தாலும். இந்த மசோதாக்களை நிறைவேற்றும் போது ஒட்டுமொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் 50 சதவீத ஆதரவு அல்லது குறிப்பிட்ட அவையில் உள்ள மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு அவசியம்.

அப்படி பார்க்கும்போது மக்களவையில் இந்த மசோதாவை நிறைவேற்ற 364 உறுப்பினர்களின் ஆதரவு தேவை. தற்போது தேசிய ஜனநாயக கூட்டணிக்கு 293 உறுப்பினர்களின் ஆதரவு உள்ளது.கூடுதலாக 71 எம்பிக்களின் வாக்குகள் தேவை. அதே வேளையில் மக்களவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை 234 ஆக உள்ளது. மாநிலங்களவை என பார்க்கும்போது மொத்தம் 164 உறுப்பினர்களின் வாக்குகள் தேவை தேசிய ஜனநாயக கூட்டணி வசம் 141 வாக்குகள் உள்ளன அங்கும் 23 வாக்குகளை திரட்ட வேண்டிய நிலையில் பாஜக உள்ளது. ஒருவேளை மசோதா மீதான வாக்கெடுப்பு நடக்கும்போது எதிர்க்கட்சியினர் திடீரென வெளிநடப்பு செய்தாலோ அல்லது எதிர்க்கட்சி எம்பிக்களில் சிலர் ஆதரவாக வாக்கு அளித்தாலோ நிலைமை பாஜக வசம் செல்லக்கூடும். எனவே மாலை இந்த மசோதா நிறைவேறுமா? இல்லையா ? என்பது தெரிந்துவிடும்.

## தீரன் சின்னமலை பிறந்த நாள்! ஆதிக்கவாதிகளை எதிர்த்து போராடுவோம் என ஸ்டாலின் எக்ஸ் பதிவு...!

சென்னை, ஏப். 17–

சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை பிறந்த நாள் விழா, இன்று தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றது. அவரது பிறந்த நாளில் முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டிருக்கும் எக்ஸ் தள பதிவில் , ''பிரிட்டிஷாரைக் கலங்கடித்த தமிழ் வீரர் தீரன் சின்னமலை பிறந்தநாள்!அன்று, நேரடியாகப் போரிட்டு வெல்ல முடியாத ஆங்கிலேய ஆதிக்கவாதிகள் சூழ்ச்சியால்தான் சின்னமலையை வீழ்த்த முனைந்தார்கள்!



இன்றோ, தமிழ்நாட்டுக்குள் நேரடியாக நுழைய முடியாத தில்லி ஆதிக்கவாதிகள் 'தொகுதி மறுவரையறை' எனும் சதித் திட்டத்தால் நம்மை அரசியல் வலிமையற்றவர்களாக்க முனைகிறார்கள்.அன்று, சின்னமலையைக் காட்டிக் கொடுத்தான் ஒரு துரோகி. இன்றும் சில அடிமைகள் தங்கள் சுயநலத்துக்காகத் தாய்த்தமிழ்நாட்டின் எதிர்காலத்தையே ஆர்.எஸ்.எஸ். எஜமானர்களின் காலடியில் அடகு வைக்கின்றனர். இந்த ஆதிக்கவாதிகளையும் அடிமைகளையும் எதிர்த்து தமிழ்நாடு போராடு, வெல்லும் எனத் தீரன் சின்னமலை பிறந்தநாளில் சூளுரைக்கிறேன்!'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

## தலையங்கம்

மதுரை மணி
வெள்ளிக்கிழமை 17.04.2026
விசுவாவசு தமிழ் வருடம்
சித்திரை மாதம் 04-ம் தேதி

# 850 ஆக உயரும் நாடாளுமன்றத் தொகுதிகள்..!



நாடாளுமன்ற மக்களவை இடங்களின் எண்ணிக்கையை தற்போதைய 543–லிருந்து 850 ஆக உயர்த்த மத்திய அரசு அதிரடி நடவடிக்கையில் இறங்கியிருக்கிறது. இதற்காக 16 முதல் 18 வரை நடைபெறவுள்ள சிறப்பு பட்ஜெட் கூட்டத்தொடரில் மூன்று முக்கிய மசோதாக்களை அரசு தாக்கல் செய்கிறது. பெண்களுக்கான 33% இடஒதுக்கீடு மற்றும் மக்கள் தொகை அதிகரிப்பு ஆகியவற்றை இதற்கான காரணங்களாக அடுக்குகிறார் பிரதமர் மோடி. ஆனால், இதன் பின்னணியில் இருக்கும் ‘அரசியல் கணக்கு’தான் இப்போது தென் மாநிலங்களை அதிர வைத்திருக்கிறது. என்ன நடக்கிறது? இந்தியாவில் கடைசியாக 2002–ல் தொகுதி மறுவரையறை (Delimitation) நடந்தது. ஆனால், அப்போது தொகுதிகளின் எல்லைகள் மட்டுமே மாற்றப்பட்டன; இடங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவில்லை. இப்போது 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் புதிய ‘டி–லிமிட்டேஷன்’ கமிஷனை அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்த பணிகள் 2029 பொதுத்தேர்தலுக்கு முன்பாக முடிக்கப்படும் எனத் தெரிகிறது. வடக்கின் எழுச்சி... தெற்கின் வீழ்ச்சி? மத்திய அரசின் உத்தேச திட்டத்தின்படி 850 இடங்கள் உருவானால், அதில் 815 இடங்கள் மாநிலங்களுக்கும், 35 இடங்கள் யூனியன் பிரதேசங்களுக்கும் ஒதுக்கப்படும்.

இதில் வேடிக்கை என்னவென்றால், மக்கள் தொகையை கட்டுப்படுத்தாமல் கோட்டைவிட்ட வட மாநிலங்களுக்கு ‘பம்பர் பரிசு’ கிடைக்கப்போகிறது. மக்கள் தொகையை வெற்றிகரமாக கட்டுப்படுத்திய தென் மாநிலங்களுக்கு ‘தண்டனை’ கிடைக்கப்போகிறது. யார் யாருக்கு எவ்வளவு உயரும்? (உத்தேச கணக்கு): உத்தரப்பிரதேசம்: 80 –> 140 (மெகா ஜாக்பாட்!) Powered By பீகார்: 40 –> 73 ராஜஸ்தான்: 25 –> 48 மத்திய பிரதேசம்: 29 –> 51 தென்னிந்தியா நிலை என்ன? தமிழ்நாடு: 39 –> 51 (வெறும் 12 இடங்கள் மட்டுமே உயர்வு!) கேரளா: 20 –> 23 ஆந்திரா + தெலங்கானா: 42 –> 59 நாட்டின் ஜிடிபி–யில் 31% பங்களிப்பை வழங்கும் தென் மாநிலங்கள், அரசியல் அதிகாரத்தில் ஓரங்கட்டப்பட வாய்ப்புள்ளதாக அச்சம் எழுந்துள்ளது. அதிக இடங்கள் உயரும் மாநிலங்கள் அனைத்தும் தற்போது பாஜக ஆளும் மாநிலங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. “இது ஒரு சதித் திட்டம்!” – கொதிக்கும் தலைவர்கள் இந்த விவகாரத்தில் தென் மாநில முதல்வர்கள் மிகக் காட்டமான எதிர்வினைகளை ஆற்றி வருகின்றனர். “மக்கள் தொகையை கட்டுப்படுத்தியதற்காக தென் மாநிலங்களைத் தண்டிப்பதா? இது ஒரு அரசியல் சதி. தமிழ்நாட்டின் அரசியல் அதிகாரத்தைப் பறிக்க நினைத்தால் மாபெரும் போராட்டங்களைச் சந்திப்பீர்கள்” என எச்சரித்துள்ள முதல்வர் மு.க. ஸ்டாலின், இது தொடர்பாக திமுக எம்பிக்களின் அவசரக் கூட்டத்தைக் கூட்டியுள்ளார். தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டியோ ஒரு படி மேலே போய், “மக்கள் தொகையை மட்டும் அடிப்படையாகக் கொள்ளாமல், மாநிலத்தின் பொருளாதாரப் பங்களிப்பு மற்றும் வளர்ச்சியையும் கணக்கில் கொள்ளும் ‘ஹைப்ரிட் மாடல்’ (Hybrid Model) கொண்டு வரப்பட வேண்டும்” எனப் பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார். காங்கிரஸ் தரப்பில் ஜெயராம் ரமேஷ், “பெண்கள் இடஒதுக்கீடு என்ற போர்வையில் கூட்டாட்சித் தத்துவத்தை புல்டோசர் கொண்டு இடிக்கப் பார்க்கிறது பாஜக” எனச் சீறியுள்ளார். சிவசேனாவின் சஞ்சய் ராவத்தோ, “இது இந்தியாவின் அரசியல் வரைபடத்தையே மாற்றிவிடும்; மணிப்பூரில் நிலவுவது போன்ற பதற்றம் தெற்கிலும் உருவாக வாய்ப்புள்ளது” என பகீர் கிளப்பியுள்ளார். அடுத்தது என்ன? 850 என்பது அதிகபட்ச எண்ணிக்கைதான், இறுதி எண்ணிக்கையை கமிஷன் முடிவு செய்யும் என அரசுத் தரப்பு கூறினாலும், ‘கெர்ரிமாண்டரிங்’ (Gerrymandering – ஆளுங்கட்சிக்குச் சாதகமாக தொகுதிகளைப் பிரித்தல்) நடக்குமோ என்ற அச்சம் அரசியல் ஆர்வலர்களிடையே எழுந்துள்ளது. பெண்களுக்கான இடஒதுக்கீடு சுழற்சி முறையில் வழங்கப்படும் என்பது வரவேற்கத்தக்கது என்றாலும், அந்த இடஒதுக்கீட்டைச் செயல்படுத்த வேண்டுமென்றால் தொகுதி மறுவரையறை அவசியம் என்கிற ‘நிபந்தனை’தான் சர்ச்சையின் ஆணிவேர். வளர்ச்சிக்குத் தண்டனையா? எண்ணிக்கைக்குப் பரிசா? டெல்லியின் இந்த ‘மூவ்’ இந்திய ஜனநாயகத்தின் கூட்டாட்சித் தத்துவத்தை எந்தப் பக்கம் தள்ளப்போகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்!

## நினைவாற்றல் பாதிப்பால் வினோத் காம்ப்ளி அவதி!



மும்பை,ஏப். 17–

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் வினோத் காம்ப்ளி நினைவாற்றல் பாதிப்பால் அவதிப்பட்டு வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. இதை அவரது நெருங்கிய நண்பர் மார்கஸ் உறுதி செய்துள்ளார். 54 வயதான வினோத் காம்ப்ளி, இந்திய அணிக்காக மொத்தம் 104 ஒருநாள் போட்டிகள் மற்றும் 17 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி உள்ளார். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் அவருக்கு பென்ஷன் தொகை வழங்கப்பட்டு வருவதாக தகவல். இந்த சூழலில் அவரது உடல்நிலை மிகவும் மோசமடைந்தது. கடந்த 2024–ல் அவர் நடக்கவே மிகவும் சிரமப்பட்ட வீடியோ காட்சி வெளியானது.



## தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்களவையில் கனிமொழி பேச்சு!!

டெல்லி, ஏப். 17–

தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்களவையில் கனிமொழி பேசினார். நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெறும் போதே மகளிர் இட ஒதுக்கீடு குறித்து அரசிதழில் வெளியிட்டது ஏன் என கேள்வி எழுப்பினார்.

## தி.மு.க. வேட்பாளர்கள் ஓட்டுக்காக ரூ.8 ஆயிரம் பரிசு கூப்பன் வழங்குவதாக ஐகோர்ட்டில் முறையீடு!

சென்னை, ஏப். 17–

சென்னை ஐகோர்ட்டில் தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் நேற்று வழக்குகளை விசாரிக்க தொடங்கினர். அப்போது, வக்கீல் ஏ.பி. சூர்யபிரகாசம், “தமிழ்நாடு முழுவதும் தி.மு.க.வினர் வாக்காளர்களுக்கு ரூ.8 ஆயிரம் மதிப்புள்ள பரிசு கூப்பன்களை வினியோகம் செய்து வருகின்றனர். தேர்தலுக்கு சில நாட்களே உள்ள நிலையில், தி.மு.க. வேட்பாளர்கள் இதுபோல கூப்பன்களை வழங்கி, ஓட்டுகளை சேகரித்து வருகின்றனர். இதை தடுக்க நடவடிக்கை எடுக்கும்படி தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும். இதுகுறித்து வழக்கு தொடர உள்ளேன். அந்த வழக்கை அவசர வழக்காக விசாரிக்கவேண்டும்” என்று கோரிக்கை விடுத்தார்.




அதே போல, சென்னை துறைமுகம் சட்டசபை தொகுதியில், அ.தி.மு.க. சார்பில் ராயபுரம் ஆர். மனோகர் போட்டியிடுகிறார். அவர், ரொக்க பணம் வழங்குவதற்கான டோக்கன்களை வினியோகம் செய்து வருகிறார்.

இதை தடுக்கவேண்டும் என்று வக் கீல் ஷியாம்குமார் என்பவர் முறையீடு செய்தார். இந்த 2 முறையீடுகளையும் கேட்ட நீதிபதிகள், வழக்கு தாக்கல் செய்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறினர்.

## வாக்களிப்பதை கட்டாயமாக்க உத்தரவிட முடியாது- சுப்ரீம் கோர்ட்டு மறுப்பு!

புதுடெல்லி, ஏப். 17–

சுப்ரீம் கோர்ட்டில், அஜய் கோயல் என்பவர் ஒரு பொதுநல மனு தாக்கல் செய்துள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:– தேர்தல்களில் வாக்களிப்பதை கட்டாயமாக்க வேண்டும். வேண்டுமென்றே வாக்களிக்காமல் இருப்பவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட வேண்டும். அவர்கள் அரசு திட்டங்களை பெற தடை விதித்து வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட தேர்தல் கமிஷனுக்கு உத்தரவிட வேண்டும்.இவ்வாறு அதில் கூறியிருந்தார்.




இந்த மனு, தலைமை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதிகள் ஜோய் மால்யா பக்சி, விபுல் எம்.பாஞ்சோலி ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு எடுத்துக்கொள்ளப்பட்டது.மனுவை விசாரணைக்கு ஏற்க நீதிபதிகள் மறுத்து விட்டனர். தலைமை நீதிபதி கூறியதாவது:–மனுதாரர் கேட்பது கொளகை முடிவு சார்ந்த விவகாரம்.இதில் நீதித்துறை உத்தரவிட முடியாது.நமது நாடு, சட்டத்தின் ஆட்சி நடக்கும் நாடு. ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட நாடு. ஜனநாயகத்தின் மீதான நம்பிக் கையை 75 ஆண்டுகளாக காண்பித்துள்ளோம். அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் ஒருசிலர் போகக்கூடாது என்று நினைத்தால், போக மாட்டார்கள்.இதில் விழிப்புணர்வுதான் தேவை. யாரையும் வற்புறுத்த முடியாது.

வாக்களிக்காமல் இருப்பதை எப்படி குற்றமாக்கு வது? அவர்களை கைது செய்ய உத்தரவிட வேண்டுமா? ஒருவர் வாக்களிக்க செல்லாவிட்டால் நாம் என்ன செய்ய முடி யும்? அதில் நடைமுறை சிக்கல்கள் இருக்கின்றன. தேர்தல் நாளில் நீதிபதிகள் உள்பட பலருக்கு பணிகள் இருக்கின்றன. வாக்களிப்பதை கட்டாயமாக்கினால், எனது சக நீதிபதி ஜோய் மால்யா பக்சி, பணிநாளாக இருந்தாலும் வாக்களிக்க மேற்கு வங்காளத்துக்கு செல்ல வேண்டி இருக்கும். நீதித்துறை பணி யும் மிக முக்கியமானது. ஒரு ஏழை, தான் வேலைக்கு சென்றால்தான் சம்பளம் கிடைக்கும், நான் எப்படி வாக்களிப்பது என்று கேட்டால், நாம் என்ன சொல்ல முடியும்? இவ்வாறு தலைமை நீதிபதி கூறி னார்.

## எரிபொருள் தட்டுப்பாட்டால் பாகிஸ்தானில் மின்வெட்டு அமல்!

இஸ்லாமாபாத், ஏப். 17–

ஈரான் போர் காரணமாக உலகளவில் எரிபொருள் விலை உயர்ந்துள்ள நிலையில், மின்சாரக் கட்டண உயர்வைத் தவிர்க்க பாகிஸ்தான் அரசு நாடு தழுவிய மின்வெட்டை அறிவித்துள்ளது. இதன்படி, தினமும் மாலை 5 மணி முதல் நள்ளிரவு 1 மணி வரையிலான நேரங்களில், சுமார் இரண்டேகால் மணி நேரம் மின்சாரம் நிறுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. எரிசக்தித் தட்டுப்பாடு மற்றும் இறக்குமதி செய்யப்படும் எரிபொருட்களின் விலை அதிகரிப்பு ஆகியவற்றைச் சமாளிக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.



இருப்பினும், நாட்டின் முக்கிய நகரங்களான கராச்சி மற்றும் ஐதராபாத் ஆகியவற்றுக்கு இந்த மின்வெட்டிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டமிட்ட மின்வெட்டு மூலம் மின் கட்டணம் யூனிட்டிற்கு 6 ரூபாய் வரை உயர்வது தவிர்க்கப்படும் என அந்நாட்டு எரிசக்தி அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்த மின்வெட்டால் மக்கள் கடும் அவதி அடைந்துள்ளனர்.

## சீமான் மீது தஞ்சை போலீசார் வழக்குப்பதிவு!

தஞ்சாவூர், ஏப். 17–

தஞ்சை பனகல் கட்டிடம் எதிரே நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் அறிமுகக்கூட்டம் நேற்று இரவு நடந்தது. கூட்டத்தில் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் கலந்து கொண்டு வேட்பாளர்களை அறிமுகப்படுத்தி பேசினார்.

தேர்தல் நடத்தை விதிமுறைகளின்படி, இரவு 10 மணி வரை தான் ஒலிபெருக்கியில் பிரசாரம் செய்ய வேண்டும். ஆனால், இந்த கூட்டத்தில் இரவு 9.30 மணியளவில் பேச தொடங்கிய சீமான் 10 மணியை கடந்து பேசினார். அதற்கு சில நிமிடங்களுக்கு முன்பே சீமானை நோக்கி துணை போலீஸ் சூப்பிரண்டு சோமசுந்தரம் கைக்கடிகாரத்தை காண்பித்து நேரமாகிவிட்டது என முன்னெச்சரிக்கை செய்தார். தொடர்ந்து 10 மணி கடந்த பின்னரும் பேசிய சீமானிடம் எச்சரித்தார்.



ஆனால், அவர் வழக்கு வேண்டுமானால் பதிவு செய்து கொள்ளுங்கள் எனக் கூறி, தொடர்ந்து 10.10 மணி வரை பேசினார். இந்த நிலையில் சீமான் மற்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் மீதும் தஞ்சை போலீசார் தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறியதாக வழக்குப்பதிவு செய்தனர்.

## குஷ்பு வந்த ஹெலிகாப்டரில் தேர்தல் பறக்கும் படையினர் சோதனை!

ஊட்டி, ஏப். 17–

தமிழக சட்டமன்ற தேர்தல் வருகின்ற 23 ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், அரசியல் கட்சித் தலைவர்கள் தீவிரப் பிரசாரம் மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில், உதகையில் போட்டியிடும் பாஜக வேட்பாளர் போஜ ராஜனுக்கு ஆதரவாக வாக்கு சேகரித்து பிரசாரம் மேற்கொள்வதற்காக ஹெலிகாப்டர் மூலம் குஷ்பு பயணம் மேற்கொண்டார்.

உதகையில் குஷ்பு பயணித்த ஹெலிகாப்டர் தரையிறங்கியவுடன் தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டனர். சோதனைக்குப் பின்னர், கார் மூலம் அங்கிருந்து புறப்பட்டு பிரசாரம் நடைபெறும் இடத்துக்கு குஷ்பு சென்றார்.






## நிம்மதியான இரவு உறக்கம் பெற உதவும் ‘ஜோதிட பரிகாரங்கள்’!



வேத ஜோதிட நிபுணர்கள் கருத்துப்படி, நம் உறக்கத்திற்கும் – கிரகங்களின் ஆற்றல் சமநிலைக்கும் நெருக்கமான தொடர்பு காணப்படுகிறது. கிரகங்களின் சமைநிலையின்மை, நம் இரவு உறக்கத்தையும்; உடல் ஆரோக்கியத்தையும் பாதிக்கும். எதிர்மறை ஆற்றலை கொண்டு வரும், மனதளவிலும் நம்மை பாதிக்கும். கிரகங்களின் ஆற்றல் சமநிலையை உறுதி செய்து, முழுமையான இரவு உறக்கத்தை உறுதி செய்ய, எளிய ஜோதிட பரிகாரங்கள் சில உதவி செய்யும் எனவும் நிபுணர்கள் கருதுகின்றனர்.

**காரணம் 1 – சந்திரன் பலவீனம்!**

ஜோதிட நிபுணர்கள் கூற்றுப்படி நம் இரவு உறக்கத்தை பாதிக்கும் ஒரு விஷயமாக சந்திரன் ஆற்றல் சமநிலையின்மை பார்க்கப்படுகிறது. அதாவது, உங்கள் ஜாதகத்தில் சந்திரன் பலவீனமான நிலையில் இருக்க, இரவு உறக்கம் பெறுவதில் சிரமங்கள் அதிகரிக்கும். உணர்வுகள் மற்றும் உணர்ச்சிகளை ஆளும் சந்திரனின் பலவீனமான நிலை, முழுமையான இரவு உறக்கத்தை பெற விடாமல் தடுக்கும். உங்கள் ஜாதகத்தில் சந்திரனை பலப்படுத்துவதன் மூலம், நிம்மதியான இரவு உறக்கத்தை நீங்கள் பெறலாம்.

சந்திர பகவானுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ‘ஓம் சோம் சோமாய நமஹ’ எனும் மந்திரத்தை தினமும் காலை உச்சரிக்க சந்திரனின் ஆற்றலை மேம்படுத்தலாம் – நிம்மதியான இரவு உறக்கம் பெறலாம்.

இரவு உறங்க செல்வதற்கு முன், வெதுவெதுப்பான நீரில் குளித்து, பின் ‘ஓம் சந்திராய நமஹ’ எனும் மந்திரத்தை 108 முறை உச்சரியுங்கள்.

**காரணம் 2 – ராகு, சனி விளைவுகள்!**

நிழல் கிரகமாக ராகுவின் எதிர்மறையான விளைவுகள் பதற்றத்தை அதிகரிக்கும், எதிர்காலம் தொடர்பான சிந்தனைகளை அதிகரிக்கும். அச்சத்தின் காரணமாக உங்கள் மன அமைதியை சிதைக்கும், நிம்மதியான இரவு உறக்கம் கிடைக்க விடாமல் உங்களை வாட்டி வதைக்கும். அதேப்போன்று, உங்கள் கர்ம பலன்களை அளிக்கும் சனி பகவான், நிம்மதியான இரவு உறக்கம் பெறுவதன் வாய்ப்புகளை தடுப்பார். பின் வரும் பரிகாரங்களை செய்து வர, இப்பிரச்சனைகளை சமாளிக்கலாம்.

வாரம் இரண்டு முறை உங்கள் படுக்கையறையில் பாதுகாப்பான முறையில் கற்பூரம் ஏற்றி, தியானம் செய்யுங்கள். உங்கள் படுக்கையறையில் காணப்படும் எதிர்மறை ஆற்றலை விரட்ட இது உதவி செய்யும்.

வாரம் தோறும் வெள்ளி – செவ்வாய் கிழமைகளில் பூஜையறையில் நல்லெண்ணெய் விளக்கு ஏற்றி, முறையாக வழிபட்டு வர வீட்டில் நேர்மறை ஆற்றல் அதிகரிக்கும், நிம்மதியான இரவு உறக்கமும் கிடைக்கும்.

இரவு உறங்க செல்வதற்கு முன் குறைந்தது 5 நிமிடம் மூச்சுப்பயிற்சி செய்யுங்கள்.

**காரணம் 3 – புதன் கிரகத்தின் ஆற்றல் சமநிலையின்மை!**

தனி நபரின் ஜாதகத்தில் அறிவாற்றல், தொடர்பாற்றல் திறனை பிரதிபலிக்கும் ஒரு கிரகமாக புதன் பார்க்கப்படுகிறார். புதன் கிரகத்தின் ஆற்றல் சமநிலையின்மை, உங்கள் பேச்சாற்றலை பாதிக்கும், அதன் வழியே சில பல பிரச்சனைகளை கொடு வரும். இதன் தாக்கம், உங்களை நிம்மதியாக உறங்க விடாது தவிக்கும்.

இரவு உறங்க செல்வதற்கு முன், உங்கள் மனதில் இருக்கும் கோவம் – ஆதங்கத்தை, ஒரு காகிதத்தில் எழுதி பின் அழித்துவிடுங்கள். உங்கள் மனதில் இருக்கும் குழப்பங்கள் நீங்க, நிம்மதியான இரவு உறக்கம் காணலாம்.

இரவு உறங்க செல்வதற்கு முன் ‘ஓம் நமோ பகவதே வாசுதேவாய’ எனும் மந்திரத்தை உச்சரித்து, அதன் பின் உறங்க செல்லுங்கள். இதனுடன் ஒரு 5 நிமிடத்திற்கு சுவாச பயிற்சி மேற்கொள்வதும் நேர்மறையான பலன்களை உங்கள் வாழ்க்கையில் கொண்டு வரும்.

**காரணம் 4 – வாஸ்து தவறுகள்!**

பஞ்ச பூதங்களை ஒருங்கிணைத்து, நடைமுறை வாழ்க்கையில் காணப்படும் பிரச்சனைகளை தீர்க்கும் ஒரு கணிப்பு முறையாக வாஸ்து பார்க்கப்படும் நிலையில், வாஸ்து குறிப்புகளை பின்பற்றுவதில் நாம் செய்யும் சிறு தவறுகளும், நிம்மதியான இரவு உறக்கத்தை பாதிக்கலாம்.

தெற்கு பக்கம் தலை வைத்து படுப்பது, உங்கள் இரவு உறக்கத்தை பாதிக்கும்.

படுக்கையறையில் கண்ணாடி வைப்பதும் உங்கள் இரவு உறக்கத்தை பாதிக்கும். குறிப்பாக, படுக்கையறையில் உடைந்த கண்ணாடி வைத்திருப்பது கூடாது.

படுக்கைக்கு அருகில் ஒரு கோப்பையில் நீர் வைத்து பின் உறங்க செல்லுங்கள். அறையின் எதிர்மறை ஆற்றலை போக்க இது உதவி செய்யும்.

அறையில் அடர் நிறங்கள் பயன்படுத்துவது கூடாது, வெள்ளை – வெளிர் நீலம் போன்ற தன்மையான நிறங்களை பயன்படுத்துவது நல்லது!

**பொறுப்புத் துறப்பு:**

பொதுவான ஜோதிட – வாஸ்து கணிப்புகள், மரபு வழி நம்பிக்கைகளின் அடிப்படையில் இந்த தகவல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்ட தகவல்கள் அல்ல.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



### 3:3 ஃபார்முலா.. வாரத்தில் 5 நாட்கள் நடைபயிற்சி செய்தாலே போதுமே.. ஆரோக்கியம் நீளும்..!



சமூக வலைதளங்களில் வைரலாகி வரும் 'ஜப்பான் வாக்கிங் முறை' தற்போது உலகளவில் கவனம் பெற்று வருகிறது. Interval Walking Training (IWT) எனப்படும் இந்த நடைப்பயிற்சி முறை, குறைந்த நேரத்தில் அதிக ஆரோக்கிய நன்மைகளை வழங்குவதால் பெரிதும் பேசப்படுகிறது. இந்த முறையை ஷின்ஷு பல்கலைக்கழகம் பேராசிரியர்கள் உருவாக்கியுள்ளனர். சாதாரண நடைப்பயிற்சியை விட, மெதுவான மற்றும் வேகமான நடைப்பயிற்சிகளை மாறி மாறி செய்வதன் மூலம் உடலுக்கு அதிக பயன் கிடைக்கும் என்பது இந்த முறையின் அடிப்படை.

ஆராய்ச்சிகளின் படி, இந்த நடைப்பயிற்சி முறையை தொடர்ந்து பின்பற்றுவதன் மூலம் இதய ஆரோக்கியம் மேம்படும், உடல் எடை குறையும், சகிப்புத்தன்மை அதிகரிக்கும் போன்ற பல நன்மைகள் கிடைக்கின்றன. சாதாரண நடைப்பயிற்சியில் நாம் ஒரே வேகத்தில் தொடர்ந்து நடப்பது வழக்கம். ஆனால் Interval Walking Training (IWT) எனப்படும் ஜப்பான் வாக்கிங் முறையில் வேகம் மாற்றி மாற்றி நடப்பதே முக்கிய அம்சமாகும். இந்த முறையின் அடிப்படை ஃபார்முலா 3:3 ஆகும்.

**முதல் 3 நிமிடங்கள்:** மெதுவாக அல்லது சாதாரண வேகத்தில் நடை

**அடுத்த 3 நிமிடங்கள்:** சற்று வேகமாக (brisk walking) நடை

**ஏன் இந்த 3:3 முறை முக்கியம்?**

இந்த முறை உடலை ஒரே மாதிரி வேலை செய்ய விடாமல், வேக மாற்றம் மூலம் இதயத்துக்கும் தசைகளுக்கும் அதிக சவாலை அளிக்கிறது. இதனால் கலோரி எரிப்பு அதிகரிக்கும், இதய துடிப்பு கட்டுப்பாட்டில் இருக்கும், உடல் சக்தி (stamina) மேம்படும். இந்த சுழற்சியை ஒரு நாளைக்கு 5 முறை மொத்தம் 30 நிமிடங்கள் செய்ய வேண்டும்.

சாதாரணமாக தினமும் 10,000 அடிகள் நடப்பது நல்லது எனக் கூறப்பட்டாலும், 'ஜப்பான் வாக்கிங் முறை' அதைவிட குறைந்த நேரத்தில் அதிக பலன்களை தரும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்த இடைவெளி நடைப்பயிற்சி (Interval Walking) வெறும் 30 நிமிடங்கள் செய்தாலே உடலில் கணிசமான மாற்றம் கிடைக்கும். அதனால் தான் 2026–ஆம் ஆண்டில் இது உடற்பயிற்சி ஆர்வலர்களிடையே முக்கியமான "லைப் ஹேக்" ஆக பார்க்கப்படுகிறது.


**யாரெல்லாம் செய்யலாம்?**

வயதானவர்களும் செய்யலாம், மூட்டு வலி உள்ளவர்களும் தங்கள் உடல்நிலைக்கு ஏற்ப வேகத்தை மாற்றிக் கொள்ளலாம்.

**எத்தனை நாட்கள் செய்ய வேண்டும்?**

வாரத்திற்கு 4 முதல் 5 நாட்கள் இந்த பயிற்சியை தொடர்ந்து செய்தாலே உடலில் நல்ல மாற்றத்தை உணர முடியும் என ஃபிட்னஸ் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

# சோகத்தில் புத்தாண்டு.. தாய்லாந்தில் பலி -191



தாய்லாந்து, ஏப். 17–

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதத்தின் நடுப்பகுதியில், அறுவடைத் திருவிழாவிற்குப் பிறகு தாய்லாந்து மக்கள் தங்கள் புத்தாண்டைக் கொண்டாடுகிறார்கள்.

1 வார காலம் கொண்டாடப்படும் இது சோங்க்ரான் (Songkran) பண்டிகை என்று அழைக்கப்படுகிறது.

இதன்போது மக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்குக் குடும்பத்துடன் பயணம் செய்வது வழக்கம்.

இந்த பண்டிகையின் முக்கிய நிகழ்வு ஒருவர் மீது ஒருவர் தண்ணீர் ஊற்றி விளையாடும் தண்ணீர் திருவிழா ஆகும்.

இது கடந்த கால பாவங்களை கழுவி புத்தாண்டை வரவேற்பதை குறிக்கிறது.

'சோங்க்ரான்' என்ற சொல் சமஸ்கிருதத்தின் 'சங்கராந்தி' என்ற சொல்லிலிருந்து உருவானது. இந்தியாவில் கொண்டாடப்படும் மகர சங்கராந்தியுடன் ஒத்தது இது.

சோங்க்ரானின் இந்த ஒரு வாரக் காலத்தை அந்நாட்டு மக்கள் "ஏழு ஆபத்தான நாட்கள்" என்று அழைக்கிறார்கள்.

இந்த ஆண்டு சோங்க்ரான் கடந்த ஏப்ரல் 13 அன்று தொடங்கியது.

அதிகப்படியான மக்கள் சொந்த ஊர்களுக்கு படையெடுப்பதால் இந்த ஒரு வார காலத்தில் சுமார் 951க்கும் மேற்பட்ட சாலை விபத்துகள் அங்கு பதிவாகியுள்ளன.

இந்த விபத்துகளில் 191 பேர் உயிரிழந்துள்ளனர், நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன

42% விபத்துகள் வாகனங்களை வேகமாக ஓட்டியதால் நிகழ்ந்துள்ளன. 27.4% விபத்துகளுக்கு மது ஒரு முக்கிய காரணியாக இருந்துள்ளது.

மாலை 3 மணி முதல் 6 மணி வரையிலான நேரத்திலேயே அதிகப்படியான விபத்துகள் நடப்பதாக அந்நாட்டின் பேரிடர் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

விபத்துகள் ஒருபுறம் இருந்தாலும், தாய்லாந்து பொருளாதாரத்திற்கு இந்தப் பண்டிகை சுமார் 940 மில்லியன் டாலர் வருமானம் கொடுக்கிறது.

சுமார் 5 லட்சம் சர்வதேச சுற்றுலாப் பயணிகள் இந்த ஆண்டு பண்டிகைகளை பார்வையிட வருகை தந்துள்ளதாக கூறப்படுகிறது.

# எங்கள் ஓட்டு விற்பனைக்கு இல்லை; ஜனநாயகத்திற்கே! வைரலாகும் பதாகை!!




தூத்துக்குடி, ஏப். 17–

தூத்துக்குடி மாசிலாமணிபுரத்தில் 1953–ம் ஆண்டு நிறுவப்பட்ட மிகவும் பழமையான ஸ்ரீ காசி விநாயகர் மற்றும் ஸ்ரீ சந்தன மாரியம்மன் கோவில் அமைந்துள்ளது. இந்த கோவிலைச் சார்ந்த சுமார் 2,500 வரிதாரர்கள் ஒன்றிணைந்து, வரவிருக்கும் தேர்தலை முன்னிட்டு ஒருமித்த முடிவை எடுத்துள்ளனர்.

கோவில் வளாகத்தின் முன்பு வைக்கப்பட்டுள்ள அந்தப் பதாகையில்: "ஓட்டு என்னும் மூலப்பொருளை கேட்டு வரும் அன்பர்களே! தொழிலதிபர்களே! எங்கள் குலதெய்வம் ஸ்ரீ காசி விநாயகர் – ஸ்ரீ சந்தன மாரியம்மன் கோவில் வரிதாரர்கள், உறுப்பினர்கள் மற்றும் பக்தர்களின் ஓட்டு விற்பனைக்கு இல்லை; ஜனநாயகத்திற்கே!" என்ற வாசகங்கள் இடம்பெற்றுள்ளன.

இதுகுறித்து கோவில் தர்மகர்த்தா சுப்பையா, கௌரவ தர்மகர்த்தா செம்புலிங்கம், பொருளாளர் சுடலைமணி மற்றும் கௌரவ ஆலோசகர் மாரிமுத்து ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களிடம் கூறியதாவது: எங்களது கோவிலைச் சேர்ந்த 2,500 வரிதாரர்களும் தங்களது விருப்பப்படி ஜனநாயக முறைப்படி மட்டுமே வாக்களிப்பார்கள். எக்காரணம் கொண்டும் வாக்குகளை விற்பனை செய்ய மாட்டோம். வாக்கு என்பது ஒரு நாட்டின் மிக முக்கிய மூலப்பொருள். இதைப் பயன்படுத்திதான் கவுன்சிலர் முதல் பிரதமர் வரை அனைவரும் தேர்ந்தெடுக்கப்படு கிறார்கள். அரசியலில் நேர்மை யானவர்களுக்கும், ஜனநா யகத்திற்கும் வலுசேர்க்கும் வகையில் வாக்களிக்க முடிவு செய்துள்ளோம். பொதுமக்களிடையே இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவே இந்த கோவில் முன்பு அனைவரும் ஒன்றிணைந்து இந்தப் பதாகையை வைத்துள்ளோம்.

வாக்கிற்குப் பணம் கொடுக்கும் கலாச்சாரத்திற்கு எதிராக, ஒரு ஆன்மீக அமைப்பைச் சேர்ந்தவர்கள் திரண்டு எடுத்துள்ள இந்த முடிவு சமூக வலைத்தளங்களிலும் பொதுமக்கள் மத்தியிலும் பாராட்டைப் பெற்று வருவதோடு வைரலாகி வருகிறது.

# கள்ள சந்தையில் விற்க பதுக்கிய 47 வீட்டு உபயோக கியாஸ் சிலிண்டர்களை பறிமுதல்!



சென்னை, ஏப். 17–

அமெரிக்கா– ஈரான் போர் காரணமாக இந்தியாவில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக கியாஸ் சிலிண்டர் பற்றாக்குறை அதிகரித்துள்ளது. வணிக கியாஸ் சிலிண்டர்கள் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதால் சிறு வியாபாரிகள், ஓட்டல் உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வணிக கியாஸ் சிலிண்டர் தட்டுப்பாடு, விலை உயர்வால் டீ, காபி, உணவுகளின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இந்த நிலையில் கள்ள சந்தையில் வணிக சிலிண்டர்கள் பதுக்கி வைத்து விற்கப்படுகிறதா?

வீட்டு உபயோக சிலிண்டர்களை வணிக நிறுவனத்துக்கு பயன்படுத்துகிறார்களா? என புதுவை உணவு கடத்தல் தடுப்பு பிரிவு போலீசார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.

இந்த சோதனையில் வீட்டு உபயோக சிலிண்டர்களை வணிகத்துக்கு பயன்படுத்தியது, ஓட்டல்களில் பதுக்கி வைத்தது என 30 வழக்குகளை உணவு கடத்தல் தடுப்பு பிரிவு போலீசார் பதிவு செய்துள்ளனர். கள்ள சந்தையில் விற்க பதுக்கி வைத்திருந்த 47 வீட்டு உபயோக சிலிண்டர்களை பறிமுதல் செய்துள்ளனர்.

# நடிகனைப் பிடித்தால் விசில் அடிக்கலாம், நாட்டை கொடுக்க முடியுமா?- பிரகாஷ் ராஜ்!



திண்டுக்கல், ஏப். 17–

திண்டுக்கல் மாவட்டம் பழனி சட்டமன்றத் தொகுதியில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் என். பாண்டியை ஆதரித்து, நடிகர் பிரகாஷ் ராஜ் பிரசாரம் மேற்கொண்டார்.

இதற்காகப் பழனி நகரின் மின்வாரிய அலுவலகம் அருகே "இளைஞர் கலை விழா" என்ற பெயரில் நடக்கும் தேர்தல் பரப்புரை கூட்டத்தில் அவர் பேசியதாவது: "சினிமாவில் பெரிய ஹீரோவாகலாம், ஒரே படத்தில் முதல்வராகக் கூட நடிக்கலாம். ஆனால் நிஜ அரசியலில் அப்படி ஆக முடியாது. தமிழ்நாட்டின் மொழி, இனம் என பிரச்சனை வந்தபோது நீங்கள் எங்கே இருந்தீர்கள்? மக்கள் காட்டும் அன்பைத் தப்பா பயன்படுத்தாதீர்கள். நடிகனைப் பிடித்தால் தொண்டையில் விரலை விட்டு விசில் அடிக்கலாம், ஆனால் நாட்டை கொடுக்க முடியுமா?" என ஆவேசமாகத் தெரிவித்தார். தொகுதி மறுவரையறை (Delimitation) குறித்துப் பேசிய அவர், தென்னிந்தியாவின் அரசியல் அதிகாரத்தைப் பறிக்கும் முயற்சியில் மத்திய அரசு ஈடுபடுவதாகவும், பெரும்பான்மையை வைத்து எதையும் தீர்மானிக்க நினைத்தால் அது ஜனநாயகத்திற்கு ஆபத்து. மக்கள்தொகை அடிப்படையில் தொகுதிகளை மாற்றினால் தென்னிந்தியா அரசியல் அநாதையாக மாறும் என மதுரை எம்பி சு.வெங்கடேசன் அவர்கள் கூறுவது நூற்றுக்கு நூறு உண்மை. பெரும்பான்மையை வைத்துத்தான் எல்லாம் தீர்மானிக்கப்படும் என்றால், காகத்தைத்தான் தேசியப் பறவை ஆக்க வேண்டும், மயிலை அல்ல என்று அண்ணா அன்றே சொன்னார் என்றார்.

# மேற்கு வங்காளத்தில் துணை வாக்காளர் பட்டியல் வெளியீடு!




புதுடெல்லி, ஏப். 17–

மேற்கு வங்காளத்தின் தலைமைத் தேர்தல் அதிகாரி மனோஜ் குமார் அகர்வால், சிறப்பு மறுஆய்வு (SIR) செயல்முறையின் கீழ் முதல் துணை வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் இன்று வெளியிடும் என்று தெரிவித்துள்ளார். பட்டியல் வெளியான பிறகு, வாக்காளர்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால், அவர்கள் தேர்தல் ஆணையத்தின் நெட் செயலி அல்லது ஆணையத்தின் இணையதளம் வழியாக ஆன்லைனிலும், மாவட்ட அல்லது துணைப் பிரிவு அலுவலகங்களில் நேரடியாகவும் மேல்முறையீடு செய்யலாம்.

பட்டியல் வெளியிடப்பட்ட பிறகு எந்தவொரு விரும்பத்தகாத சம்பவத்தையும் தடுப்பதற்காக, கூட்டத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட கலெக்டர்களுக்கு மாநில அரசு உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது.

# நெருங்கி வரும் அட்சய திருதியை... அதிரடியாக குறைந்த தங்கம் விலை!



சென்னை, ஏப். 17–

சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,200 குறைந்து ரூ.1,13,680–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.150 குறைந்து ரூ.14,210–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலையில் இன்று மாற்றம் இல்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.275–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# சென்னை காவலர்கள் 18, 20-ம் தேதிகளில் தபால் ஓட்டுக்களை பதிவு செய்ய நடவடிக்கை!



சென்னை, ஏப். 17–

சென்னை மாவட்ட தேர்தல் அதிகாரியின் அறிவுறுத்தலின்படி 16 சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட பகுதியில் சென்னை காவல்துறையில் பணிபுரியும் காவலர்கள் வருகிற 18, 20–ம் தேதிகளில் தபால் ஓட்டுக்களை பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 18,971 காவலர்கள் தபால் வாக்குகள் பதிவு செய்ய உள்ளனர்.

# வேலை வாய்ப்பு

## ஆயுதமேந்திய எல்லைப் பாதுகாப்புப் படை (சஷஸ்திர சீமா பால்) 134 (51+ 76 + 7) காலியிடங்கள்

**SSB Recruitment 2026**

- Vacancy: 51
- Post Name: Sub Inspector (SI)
- Qualification: B.E/B.Tech, B.Sc, GNM
- Selection Process: PET, PST, CBT, DME, RME, CV

**SSB Recruitment 2026**

- Vacancy: 76
- Post Name: HC & Constable (Paramedical Staff)
- Qualification: 10th, 12th
- Selection Process: PET, PST, CBT, DME, RME, CV

**SSB Recruitment 2026**

- Vacancy: 07
- Post Name: ASI (Paramedical Staff)
- Qualification: Diploma
- Selection Process: PET, PST, CBT, DME, RME, CV

நிறுவனத்தின் பெயர்: சஷஸ்த்ர சீமா பல்

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்

மொத்த காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை: 51 உதவி ஆய்வாளர் (செவிலியர்), உதவி ஆய்வாளர் (பயனியர்), உதவி ஆய்வாளர் (தகவல் தொடர்பு), தலைமை காவலர் (கால்நடை) பணியிடங்கள்

மொத்த காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை: 76 தலைமை காவலர் (ஆய்வக உதவியாளர்), தலைமை காவலர் (பிசியோதெரபி உதவியாளர்), காவலர் (செவிலியர் உதவியாளர் மருத்துவர்) பணியிடங்கள்

காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை: 07 உதவி உதவி ஆய்வாளர் (கதிரியக்கவியலாளர்), தலைமை காவலர் (பிசியோதெரபி உதவியாளர்), உதவி உதவி ஆய்வாளர் (அறுவை சிகிச்சை அரங்க தொழில்நுட்ப வல்லுநர்), உதவி உதவி ஆய்வாளர் (பல் தொழில்நுட்ப வல்லுநர்) பணியிடங்கள்

பணியிடங்கள்: இந்தியா முழுவதும்

தொடங்கும் தேதி: 21.03.2026

கடைசி தேதி: 20.04.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் மூலம் மட்டும்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://ssb.gov.in/

# சட்டசபை தேர்தலை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 10,663 சிறப்பு பஸ்கள் இயக்கம்!




சென்னை, ஏப். 17–

சென்னையிலிருந்து தினசரி இயக்கக்கூடிய 2,092 பஸ்களுடன், 5 ஆயிரத்து 574 சிறப்புப் பஸ்கள் என 3 நாட்களுக்கும் சேர்த்து ஒட்டுமொத்தமாக, 10 ஆயிரத்து 663 பஸ்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கிளாம்பாக்கத்தில் இருந்து புதுச்சேரி, கடலூர், சிதம்பரம், திருச்சி, மதுரை, தூத்துக்குடி, செங்கோட்டை, நெல்லை, சேலம், கோவை, கும்பக்கோணம் மற்றும் தஞ்சாவூர் வழியாக செல்லும் பஸ்களும், வந்தவாசி, போளூர், திருவண்ணாமலை வழியாக செல்லும் பஸ்களும் இயக்கப்படுகின்றன.




**இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்**

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை

Ph: 98659 88881


## சினிமா துளிகள்..!

### அஜித்தின் பிறந்தநாளில் ரீ-ரிலீஸாகும் 'பில்லா' திரைப்படம்!



கடந்த 2007–ம் ஆண்டு விஷ்ணுவர்தன் இயக்கத்தில் வெளியாகி பிளாக்பஸ்டர் ஹிட் அடித்த படம் பில்லா. யுவன் சங்கர் ராஜாவின் இசையில் இந்த படத்தின் பாடல்கள் மிகப்பெரிய வரவேற்பை பெற்றன. 'பில்லா' திரைப்படத்தில் நமீதா, நயன்தாரா, பிரபு உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். அஜித்குமார் இரட்டை வேடத்தின் நடித்த இப்படம் 1980ல் ரஜினி நடித்த 'பில்லா' படத்தின் ரீமேக் ஆகும். இப்படத்திற்கு பிறகு தான் அஜித்தின் ஸ்டைலும், நடிப்பும் அடுத்தகட்டத்துக்கு சென்றது. அஜித்தின் திரைவாழ்வில் ஒரு மைல்கல்லாக இப்படம் அமைந்தது.

இந்த படம் நடிகர் அஜித்தின் பிறந்த நாளை முன்னிட்டு திரையரங்குகளில் வருகிற மே 1ந் தேதி ரீ ரிலீஸ் செய்யப்பட உள்ளது. நவீன 4K தொழில்நுட்பத்தில் மெருகேற்றப்பட்டு தமிழ்நாடு முழுவதும் சுமார் 150–க்கும் மேற்பட்ட திரையரங்குகளில் வெளியிடப்பட உள்ளது. இப்படம் கடந்த 2021ஆம் ஆண்டும் ரீ–ரலீஸ் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.


**செய்தியாளர் / போட்டோ கிராபர் தேவை**

மதுரை / சென்னை ஐயை மையமாக கொண்டு இயங்கிவரும் ஒரு பத்திரிகை நிறுவனத்திற்கு விளம்பர பிரிவில் பணிபுரிய துடிப்பும் /ஆர்வமும் /அனுபவமும் நிறைந்த செய்தியாளர்கள் / புகைப்பட கலைஞர்கள் தேவை.

தொடர்பு – 7904806432







# அனல் பறக்கும் தேர்தல் களம்..!





மத்திய அரசு கொண்டு வந்துள்ள தொகுதி மறு வரை மசோதாவை கண்டித்து ஈரோட்டில் மாநில மாணவரணி சார்பில் பெரியார் நகர் 80 அடி சாலையில் கண்டன ஆர்ப்பாட்டம் மற்றும் சட்ட நகல் எரிப்பு போராட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாநில மாணவரணிச் செயலாளர் ஈரோடு ஜெ. வீரமணி தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் இக்கட்டத்தை திரும்ப பெறக்கோரி ஒன்றிய அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்கள் எழுப்பினர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர்கள் ஆ. செந்தில்குமார், க சின்னையன், செல்லப்பொன்னி, ப க பழனிச்சாமி, டி எஸ். குமாரசாமி, மாநகரக் கழக செயலாளர் மு. சுப்பிரமணியன், பகுதி செயலாளர்கள் அக்னி டி சந்திரசேகரன், வி சி நடராஜன், வில்லரசம்பட்டி ஏ. முருகேசன், குறிஞ்சி என். தண்டபாணி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தனசேகர், துணை அமைப்பாளர் சி என் கார்த்திகேயன், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திலகவதி, ஸ்ரீதர், மாணவரணி துணை அமைப்பாளர்கள் சதீஷ்குமார் நல்லசிவம் விஜயகுமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற மாபெரும் 2026 தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் களம் காணும் இராசிபுரம், சேந்தமங்கலம், நாமக்கல், திருச்செங்கோடு, பரமத்தி வேலூர் மற்றும் குமாரபாளையம் சட்டமன்ற தொகுதியின் வெற்றி வேட்பாளர்களை ஆதரித்து, எழுச்சி உரையாற்றினார். பரப்புரை மேற்கொள்ள நாமக்கல் மாவட்டம் வருகை தந்து சிறப்பித்த, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ராசிபுரம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளராகிய மா.மதிவேந்தன் நன்றி தெரிவித்தார்.



விழுப்புரம் தைலாபுரத்தில் உள்ள தனது இல்லத்தில் ராமதாஸ் தபால் வாக்கை செலுத்தினார்.



ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வேட்பாளர் அமைச்சர் சு. முத்துசாமி சென்னிமலை மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட வள்ளிபுரத்தான் பாளையம், ராசாம்பாளையம், புங்கம்பாடி ஆகிய பகுதிகளில் கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் சென்று ஓட்டு சேகரித்தார். இந்நிகழ்ச்சியில் மேற்கு சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் மீனா ஜெயக்குமார், சென்னிமலை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ப. செங்கோட்டையன், ஒன்றிய துணைச் செயலாளர் பேபி முருகேசன், சென்னிமலை முன்னாள் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் காயத்ரி இளங்கோ, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் இளங்கோ ஆகியோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு சட்டமன்றம் 2026 பொது தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு, ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதிக்கான மின்னனு ஓட்டுபதிவு இயந்திரத்தில் வேட்பாளர்களின் புகைபடத்துடன் கூடிய பெயர்களை பொருத்தும் பணி ஆண்டிபட்டி வட்டாச்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதனை தேனி மாவட்ட ஆட்சியரும், மாவட்ட தேர்தல் அலுவலருமான ரஞ்ஜித்சிங் பார்வையிட்டார்.



புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் அமைச்சர் ரகுபதி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அரிமளம் ஒன்றியதிற்க்கு உட்பட்ட பகுதிகளில் வாக்காளர்களை சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.





மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி சார்பில் பல்லடம் தொகுதியில் போட்டியிடும் செல்வராஜ் எம்எல்ஏ அவர்கள் வீரபாண்டி பகுதியில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார் உடன் திருப்பூர் மாநகராட்சியின் 4=வது மண்டல தலைவரும் கிழக்கு மாவட்ட செயலாளர் இல பத்மநாதன், பகுதி செயலாளர் கோவிந்தராஜ். கவுன்சிலர்கள் கவிதா நேதாஜி கண்ணன். மணிமேகலை ரவிச்சந்திரன்.அருணாச்சலம். பகுதி கழகத்திற்கு உட்பட்ட வட்டக் கழக செயலாளர்கள் ரவீந்திர குமார், நாச்சிமுத்து,மோகன்ராஜ், விவேகானந்தன்,நேதாஜி கண்ணன், தங்கதுரை மற்றும் சார்பு பணி நிர்வாகிகள் திமுக தலைமையிலான கூட்டணி கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்

## தலைவர்கள் எங்கெங்கு பிரசாரம்..?



சென்னை, ஏப். 17–

234 தொகுதிகளை கொண்ட தமிழக சட்டசபைக்கான தேர்தல் வரும் 23–ந்தேதி ஒரே கட்டமாக நடைபெறுகிறது. வாக்கு எண்ணிக்கை மே 4–ம் தேதி நடைபெற்று, அதே நாளில் முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. தற்போது தேர்தல் களம் அனல் பறக்கும் வகையில் அமைந்துள்ளது. தி.மு.க., அ.தி.மு.க., த.வெ.க., நாம் தமிழர் உள்ளிட்ட கட்சிகள், தங்களது வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரத்தை தீவிரப்படுத்தி உள்ளன.

தலைவர்கள் ஏப் 17 (இன்று) பிரசாரம் இடங்கள்

முதல் – அமைச்சர் மு.க.ஸ்டாலின்:–

மாலை 5 மணி– ஆண்டிப்பட்டி, இரவு 7 மணி– திண்டுக்கல் (மணிக்கூண்டு).

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி:–

சேலம் மாவட்டத்தில் உள்ள தொகுதிகள்.

நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான்:–

மேற்கு தாம்பரம், செங்கல்பட்டு, திருப்போரூர்– செய்யூர் (திருக்கழுக்குன்றம்), தியாகராயநகர்– சைதாப்பேட்டை (விருகம்பாக்கம்), மதுரவாயல், பல்லாவரம்

திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி:–

நெய்வேலி, குறிஞ்சிப்பாடி.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ:–

சீர்காழி.

தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த்:–விருதுநகர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு மாநில செயலாளர் சண்முகம்:–கீழ்வேளூர், திருவாரூர்.

இந்திய கம்யூனிஸ்டு தேசிய செயலாளர் டி.ராஜா:–

திருவாரூர், திருத்துறைப்பூண்டி, நாகை, கீழ்வேளூர்.

இந்திய கம்யூனிஸ்டு மாநில செயலாளர் வீரபாண்டியன்:–

நாகை, கீழ்வேளூர், கும்பகோணம்.

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ்:–

திருப்பத்தூர், கே.வி. குப்பம், மதுரவாயல், அண்ணாநகர், சோழிங்கநல்லூர் (மேடவாக்கம்).

அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன்:–

நாங்குநேரி.

மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன்:–

துறைமுகம், பெரம்பூர், கொளத்தூர், வில்லிவாக்கம்.

த.மா.கா. தலைவர் ஜி. கே.வாசன்:–

அவினாசி, தொண்டாமுத்தூர், கோவை தெற்கு, ஆர். எஸ்.புரம், கோவை வடக்கு, ஈரோடு மேற்கு.

## த.வெ.க.வில் பெண்களுக்கு உரிய மரியாதை இல்லை: அஜிதா ஆக்னல் குற்றச்சாட்டு!



தூத்துக்குடி, ஏப். 17–

தமிழக வெற்றிக் கழகத்தின் நிர்வாகியாக இருந்த அஜிதா ஆக்னல், அந்த கட்சியிலிருந்து விலகி அண்மையில் தி.மு.க.வில் இணைந்த நிலையில், நேற்று தமிழக மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனை நேரில் சந்தித்துப் பேசினார்.

கனிமொழி எம்.பி. முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்த அஜிதா ஆக்னல், நேற்று திருச்செந்தூர் அருகே உள்ள தண்டுபத்தில் உள்ள தி.மு.க. அலுவலகத்திற்கு வருகை தந்தார். அங்கு தமிழக அமைச்சரும், திருச்செந்தூர் தொகுதி தி.மு.க. வேட்பாளருமான அனிதா ராதாகிருஷ்ணனை நேரில் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்து பெற்றார். அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் அஜிதா ஆக்னல் பேசியதாவது:

கடந்த 25 ஆண்டுகளாக விஜய்யின் மக்கள் இயக்கத்தில் பணியாற்றி வந்தேன். கடந்த 2 ஆண்டுகளாக கட்சிக்காக முழுமையாக உழைத்தேன். ஆனால், விஜய் என்னை ஒருமுறை கூட சந்திக்கவில்லை. த.வெ.க.வில் பெண்களுக்கு உரிய மரியாதை அளிக்கப்படுவதில்லை. தூத்துக்குடி தொகுதியில் போட்டியிட எனக்கு வாய்ப்பு வழங்காமல், விஜய் தனது நண்பரான நடிகர் ஸ்ரீநாத்துக்கு வாய்ப்பு கொடுத்துள்ளார்.

தவறு செய்துவிட்டு மாற்று கட்சியிலிருந்து வந்தவர்களுக்கும், குற்றப் பின்னணி உள்ளவர்களுக்கும் மட்டுமே த.வெ.க.வில் சீட் வழங்கப்பட்டுள்ளது. சீட்டுக்காக கெஞ்சிக் கூத்தாடியும் எனக்கு வாய்ப்பு தரவில்லை.

தி.மு.க.வில் பெண்களுக்கு உரிய மரியாதை இருக்கிறது. அதனால் தான் நான் இந்த இயக்கத்தில் இணைந்தேன். பெற்ற பிள்ளைகளுக்கே கடன் கொடுத்தேன் என்று சொல்லும் ஒரே தலைவர் விஜய் தான் என அவர் சாடினார். முன்னாள் மக்கள் இயக்க நிர்வாகி ஒருவரே விஜய்யை கடுமையாக விமர்சித்துப் பேசியிருப்பது அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## “திமுகவில் ஆணாதிக்கம் அதிகம்” - குஷ்பு!

மதுரை, ஏப். 17–

மதுரையில் தமிழக பாஜக துணைத்தலைவர் குஷ்பு செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது:–

தமிழகத்தில் போதை பழக்கம் அதிகரித்ததோடு, பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகளும் அதிகரித்து ள்ளது. இதற்கு முதல் –அமைச்சர் மு.க. ஸ்டாலின் பொறுப்பேற்க வேண்டும். திமுகவில் ஆணாதிக்கம் அதிகமாக இருக்கிறது. தொகுதி மறுவரையறை செய்தால் பெண்கள் முன்னேறிவிடுவார்கள் என்ற பயத்தில் திமுகவினர் நாடகமாடி வருகின்றனர்.

மக்கள் நலன்களுக்காக கொண்டுவரப்படும் திட்டங்களை திசை திருப்பவே நகல் எரிப்பு போராட்டங்களை



நடத்து கின்றனர். சுந்தர்.சி கேள்வி கேட்ட பிறகு தான் ஒரே நாள் இரவில் சாலைகளை சுத்தம் செய்கின்றனர். தெரு விளக்குகள் கூட சரியாக இல்லை. அதை சரி செய்கின்றனர். பத்து வருடங்கள் இந்த தொகுதியில் உள்ள அமைச்சர் செய்ய முடியாததை சுந்தர்.சி பத்து நாட்களில் செய்து முடித்துள்ளார். பொது மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இப்போது இருக்கும் எம்.எல்.ஏ. வேண்டாம் என மக்கள் முடிவு எடுத்து விட்டனர்.

எனவே சுந்தர்.சி கண்டிப்பாக வெற்றி பெறுவார். இவ்வாறு அவர் பேசியுள்ளார்.

## ராகுல்காந்தி தமிழகம் வருகை!



சென்னை, ஏப். 17–

ராகுல்காந்தியின் பயணத்திட்டத்தை காங்கிரஸ் வட்டாரம் நேற்று உறுதி செய்தது. அதன்படி ஏப் 18 (சனிக்கிழமை) மற்றும் 20–ந் தேதிகளில் அவர் பிரசாரம் செய்கிறார். பொன்னேரி, சோளிங்கர், துறையூர் சட்டமன்ற தொகுதிகளில் பிரசாரம் மேற்கொள்கிறார். 20–ந் தேதி நாங்குநேரி, ஸ்ரீவைகுண்டம், குளச்சல் சட்டமன்ற தொகுதிகளில் பிரசாரம் மேற்கொள்ள இருக்கிறார்.

இதுவரை முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் மேடை ஏறாத ராகுல்காந்தி நாங்கு நேரி தொகுதியில் மு.க.ஸ்டாலினுடன் பிரசாரம் செய்வதற்கான வாய்ப்பு இருப்பதாக காங்கிரஸ் வட்டா ரங்களில் கூறப்படுகிறது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020